# பொருளியல் பாட பெறுபேறுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்: வடமராட்சிப் பிரதேசப் பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஆய்வு

**தர்சினி த.[142] & கருணாநிதி க.[143]**

**ஆய்வுச் சுருக்கம்**

மனித இனமானது அதன் பரிணாம வளர்ச்சியினை அடையத் தொடங்கிய காலத்திலிருந்தே கல்வியும் வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. அந்த வகையில் பாடசாலை, பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கலைத்திட்டங்களிற் பொருளியற்கல்வி கடந்த காலங்களில் வேகமான விருத்தியைப் பெற்றுள்ளது. அண்மைக்காலங்களில் எல்லோராலும் சிலாகித்துப் பேசப்பட்டு வருகின்ற ஒரு விடயமாக யாழ்ப்பாண மாவட்டத்துப் பாடசாலைகளினது கல்வித் தராதரத்திலான சரிவு அல்லது தேக்கநிலை காணப்படுகின்றது. இதனால் பொருளியல் பாட பெறுபேறுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் (வடமராட்சிப் பிரதேச பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஆய்வு) என்பதில் பொருளியல் பெறுபேறுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், பெறுபேறுகளைப் பாதிக்கும் காரணிகள், பெறுபேறுகளை மேம்படுத்த சில வழிமுறைகளை முன்வைத்தல் போன்ற நோக்கங்கள் முன்வைக்கப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்தில் மாணவர்களின் பெறுபேற்றை நிர்ணயிக்கும் காரணிகள் பல உள்ளன. அவற்றில் குடும்ப வருமானம், சுயமாகத் தேடிக் கற்கும் ஆற்றல், பொருத்தமான ஆசிரிய வளம், போன்ற காரணிகளை எடுத்து அவற்றின் அடிப்படையில் கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டு இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்வைக்கப்பட்ட கருதுகோளை பரிசீலிப்பதற்காக வடமராட்சிப் பிரதேசத்தில் பொருளியல் பாடம் உள்ள பாடசாலைகளில் 25% ஆன பாடசாலைகளிலுள்ள 50% ஆன மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வினாக் கொத்து, நேரடி அவதானம், நேர்காணல் என்பன பயன்படுத்தப்பட்டன. இவ் ஆய்வு spss மற்றும் excel மென் பொருட்களின் துணையுடன் விபரணப் புள்ளிவிபரவியல் மூலம் பகுபாய்வு செய்யப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் குறுக்கு வெட்டு, இணைவுக் குணகம், பிற்செலவு தரவுகளும் கையாளப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் குடும்ப வருமானத்திற்கும் பொருளியல் பெறுபேற்றிற்குமிடையில் நேர்க் கணியத் தொடர்பு காணப்படுகின்றது. சுயமாகத் தேடிக்கற்கும் ஆற்றலுக்கும் பொருளியல் பெறுபேற்றிற்கும் இடையில் நேர்க் கணியத் தொடர்பு காணப்படுகின்றது. பொருத்தமான ஆசிரிய வளம் இருந்தால் பொருளியல் பெறுபேறு அதிகரிக்கும். போன்ற கருதுகோள்களின் முடிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. மாணவர் மத்தியில் பெறுபேறுகளை அதிகரிக்கச் செய்ய வேண்டுமாயின் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் சமூகம் என அனைவரும் கல்வியின் முக்கியத்துவம் அறிந்து முனைப்புடன் செயற்பட வேண்டும்.

**பிரதான சொற்கள்:** பொருளியல், பெறுபேறுகள், பாடசாலை, வடமராட்சி

## I. ஆய்வுப் பின்னணி

மனித இனமானது அதன் பரிணாம வளர்ச்சியினை அடையத் தொடங்கிய காலத்திலிருந்தே கல்வியும் வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. மனிதன் உயிர் வாழ இயற்கையாகக் கிடைக்கும் வளங்களை ஒன்றினைத்து அவற்றின் உச்சமான பயனைப் பெறவும் அதனூடாக மனித வளத்தின் மேம்பாட்டைப் பெறவும் கல்வி உதவுகின்றது. மேலும் கல்வியானது மனிதனது வருமானம், வேலைவாய்ப்பு என்பவற்றை அதிகரிப்பதற்கான ஒரு கருவியாகவும், வெளியீட்டைத் தூண்டுவதற்கான ஒரு கருவியாகவும் வறுமை வேலையின்மையை குறைப்பதற்கான ஒரு பலம் வாய்ந்த ஆயுதமாகவும் காணப்படுகின்றது.

கல்வி என்பது மனிதனின் அத்தியாவசியத்தேவை என்பதுடன் அது மனிதனின் அடிப்படை உரிமையாகவும் காணப்படுகின்றது. என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சாசனத்தின் 26ம் உறுப்புரை குறிப்பிடுகிறது. கிரேக்க தத்துவ ஞானியான பிளேட்டோ (கி.மு428-348) என்பவர் "உண்மை, நன்மை, அழகுஇம்மூன்றினையும் உணர்த்தும் கல்வியே கல்வி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி ஒரு நாடு வறுமையிலிருந்து தப்பி ஓடுவதற்கான மார்க்கமன்று அதனை சாடுவதற்கான மார்க்கமாகும் என்று தன்சானிய நாட்டின் அதிபரும் தத்துவ மேதையுமான ஜூலியஸ் நைரேரே குறிப்பிட்டுள்ளார். இதன் படி மக்கள் வாழ்க்கையின் கொடிய நோயான வறுமையை எதிர்த்துப்போராடும் மருந்தாகக் கல்வி காணப்படுகின்றது.

To whom correspondence should be addressed: tharshinyt7@gmail.com

[142] Undergraduate, Department of Economics, University of Jaffna.

[143] Senior Lecturer, Department of Economics, University of Jaffna.

தனிப்பட்ட ஒருவரது கல்வி வளர்ச்சியில் அவனது குடும்பம், பாடசாலை, சமூகம் என்பன தொடர்பு கொண்டுள்ளன. அந்த வகையில் பாடசாலை, பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கலைத்திட்டங்களிற் பொருளியற்கல்வி கடந்தகாலங்களில் வேகமான விருத்தியைப் பெற்றுள்ளது. தனிப்பாடம் என்ற வகையில் அதன் பரப்பளவும் ஆழமும் அதிகரிக்கின்ற அதேவேளை பிறபாடங்களுடன் பொருளியலை ஒன்றிணைத்து கற்பிக்கும் பிறிதொரு விருத்தியும் ஏற்பட்டுள்ளது. சாதரண பேச்சு வழக்கிலும் பொதுஜனத் தொடர்பியலிலும் பொருளியல் சார்ந்த கலைச்சொற்களின் பிரயோகம் அதிகரித்து வருதலும் கணக்கிடப்பட்டுள்ளது. 'அரசியல் பொருளியல்' என்ற ஆய்வுப் புலத்தின் வளர்ச்சி பொருளியல் கற்றல், கற்பித்தல் என்ற துறைகளிலே செல்வாக்கு செலுத்தத் தொடங்கியது.

சமூகத்தின் பண்புநிலை சார்ந்த முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு பொருளியல் சுட்டிகள் அகிலம் முழுவதும் முன்வைக்கப்பட்டுள்ளன. அமெரிக்க வாழ்வின் பண்புநிலை பற்றியஆய்வுக்குழு (1980) பல்வேறு தொகுதிகளை உள்ளடக்கிய சுட்டிகளை வலியுறுத்துகின்றது. அவையாவன பொழுதுபோக்கு, தன்னல மேம்பாட்டிற்கான வாய்ப்புக்கள், வாழ்வின் பருமட்டான திருப்தி, உடல்நலம், கல்வி, வேலை, வாழ்க்கைத்தரம், தனியாள் பாதுகாப்பு, குடியியல் சார்ந்த கவனம், கலையாக்கம் என்பனவாகும். இவையனைத்தும் சமூக பொருளியற் பண்புகளுடன் தொடர்பு கொண்டுள்ளமை உலகளாவிய தோற்றப்பாடுகளாகும்.

விருத்தியுறும் நாடுகளை பொறுத்தவரை வாழ்க்கைப் பண்பு தொடர்பான தனித்துவமான இயல்புகள் காணப்படுகின்றன. உலக வங்கியின் தரவுகளின் படி விருத்தியுறும் நாடுகளில் உள்ள 100 மில்லியன் மக்கள் உணவு ஊட்டக்குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். என்பது தெரியவருகிறது. (world development Report -1981) நோயும், வறுமையும் தொடர்ந்து இந்த நாடுகளை தாக்குகின்றன. பருமட்டாக 900 மில்லியன் வளர்ந்தோர் மூன்றாம் உலக நாடுகளில் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றனர். இவ்வாறான அவலங்கள் விருத்திநிலை சார்ந்த பொருளியற் கல்வியினால் உணர்த்தப்படுகின்றன.

புறவயமான பொருளியல் அறிவு இயற்கை, சமூகம், மனிதன் என்ற முப்பெரும் பண்புகளைத் தழுவியும் ஒன்றினைத்தும் நிற்கின்றது. ஒன்றிணைப்பின் வழியாக எழும் சமூக இருக்கை, மனித உணர்வுகளையும், கல்வியையும் தீர்மானிக்கின்றது. சிந்தனையின் இயங்கியற் பண்பு அறிவின் வாயிலாக உண்மைகளை தேடிச் செல்கின்றது.

அண்மைக்காலங்களில் எல்லோராலும் சிலாகித்துப் பேசப்பட்டு வருகின்ற ஒரு விடயமாக யாழ்ப்பாண மாவட்டத்துப் பாடசாலைகளினது கல்வித்தராதரத்திலான சரிவு அல்லது தேக்கநிலை முனைப்படைந்துள்ளது. கல்வித்தரம் என்பது தனியாகப் பரீட்சை அடைவுகளால் தீர்மானிக்கப்படுவது அல்ல. எனினும் இன்றைய காலகட்டத்திலும் இப்பரீட்சை அடைவுகள் கல்வித்தரத்தினை அளவிடுவதற்கான பிரதானமான சுட்டிகளாகவே கருதப்படுகின்றன.

இற்றைக்கு 10 வருடங்களிற்கு முன்னர் கல்வித்தரத்தில் இலங்கையில் முன்னனி மாவட்டங்களில் ஒன்றாக் காணப்பட்ட யாழ்ப்பாண மாவட்டம் முற்றுமுழுதான பொருளாதார தடைகளிற்குட்பட்ட காலத்திற்தானும் தனது முன்னனி நிலையை தக்கவைத்துக்கொண்டிருந்தது. இன் விடவும் குறைந்தளவு கல்வி வசதி வாய்ப்புக்களைக் கொண்டுள்ள பின்தங்கிய மாவட்டங்களை விடவும் பின்தங்கியுள்ளமையை பல புள்ளி விபரங்கள் காட்டிநிற்கின்றன. புள்ளி விபரங்கள் பரீட்சைகளில் மாணவர்களது சராசரி அடைவு வீழ்ச்சியை காட்டுகின்ற அதேவேளையில் மாணவர்களது கலாசார விழுமியங்கள் சார்ந்த கட்டடங்களும் மிக அவலமான நிலைமைகளையே புலப்படுத்துகின்றன. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்ட கல்விச் சமூகம் விழிப்படைந்து திட்டமிட்ட அடிப்படையில் காரியங்களை செயற்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். எனவே இந் நிலைமையை ஆய்வுசெய்து மேம்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இந்நிலையில் எனது ஆய்வானது பாடசாலைகளில் பொருளியல் பாட பெறுபேறுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி நோக்கும் முகமாக ''பொருளியல் பாட பெறுபேறுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்'' (வடமராட்சிப் பிரதேசப் பாடசாலைகளை மையமாகக் கொண்ட ஆய்வு) என்னும் தலைப்பில் அமைகின்றது. இவ் ஆய்வானது வடமராட்சி பிரதேசப் பாடசாலைகளில் பொருளியல் பெறுபேறுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், பெறுபேறுகளைப் பாதிக்கும் காரணிகளைக் கண்டறிதல், மற்றும் மேம்படுத்தலுக்கான எதிர்கால சிந்தனைத்திட்டம் மற்றும் செயல்கள் பற்றியும் கவனம் செலுத்துகின்றது.

### II. இலக்கிய மீளாய்வு

GOODMAN (1956) இல் மேற்கொண்ட ஆய்வில் பல கைத்தொழில் நாடுகளின் கணித அடைவிற்கும் பெற்றோரின் தொழிலுக்குமான இடைத்தொடர்பு பூச்சியமாகக் காணப்படுகின்றது. என்பதை புள்ளிவிபர ரீதியாக ஆராய்ந்தார். Lencks (1972) என்பவர் குடும்பப் பின்னனியே கல்விப் பெறுபேறுகளை தீர்மானிக்கும் முக்கிய காரணி என்பதை விபரண ரீதியாக விளக்கியுள்ளார்.

வீட்டுச்சூழல் மாணவர்களின் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு சமூகக் காரணி என்பதனை விபரண ரீதியாக Postalath wait (1976) இல் புலப்படுத்தியுள்ளார். வீட்டில் அமைதியான சூழல் படிப்பதற்கு ஏற்றதாகவும், கல்வி கற்ற பெற்றோர் ஊக்கமளிப்பதாகவும், புத்தகங்கள் மற்றும் பிற துணைக்கருவிகளை வழங்குபவர்களாகவும் இருக்கையில் பிள்ளைகளின் கல்வி தேர்ச்சி மேம்பாடு அடையும் எனக் கண்டறிந்துள்ளார்.

Petricia cayoseexion (1978) இல் மாணவர்களின் அடைவு மட்டத்தையும் குடும்ப வருவாயையும் ஒப்பிடும் ஆய்வு என்ற தலைப்பில் மாணவர்களின் நூறகல்வியடைவு, இடைவிலகல் வீதம், குடும்ப வருமானம் என்பவற்றினிடையே இணைவு இருத்தலை எடுத்துரைத்ததுடன் உயர் குடும்ப வருமானமுள்ள நீக்றோ மாணவர்கள் அதே இனவகை ஏழை மாணவர்களைவிட உயர்மட்டக் கல்வியடைவை பெற்றிருந்தனர் எனவும் விபரண ரீதியாக குறிப்பிட்டுள்ளார்.

சந்திரசேகரம். சோ(1970) என்பவர் ஒரு நாட்டின் கல்வி முறை திறம்பட இயங்கவும் கல்வித்தரம் உயரவும் உழைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடமும் கல்வி அதிகாரிகளிடமும் ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் உள்ளது. எமது நாட்டில் இது மாறானது. பிள்ளைகளுக்கு பெற்றோரின் கல்வி புகட்டும் முதல் சாதனமாக தாங்கள் அமைய வேண்டியதன் அவசியத்தை உணரத் தவறியமைக்கு அவர் தம் கல்வித்தரம் குறைந்திருப்பது முக்கிய காரணமாகும். அத்துடன் வளர்ச்சிற்ற பொருளாதார நிலையும் காரணமாகும். கல்விப்பிரச்சினை பற்றி கருத்துப் பரிமாறிக்கொள்ள வேண்டும். என்ற முக்கிய விடையங்களை விபரணப் பகுப்பாய்வின் மூலம் விபரித்துள்ளார்.

பேர்ணாட். க (1970) என்பவர் பிள்ளையினது விருத்தியில் மரபும் சூழலும் பெரும் பங்கு வகிக்கிறது என்றும் பிள்ளையானது எதிர்காலத்தில் நற்பிரஜையாகவும் தன்நம்பிக்கையையும் கொண்ட பூரண ஆளுமை மிக்க மனிதனாக மிளிர்வதற்கு பிள்ளை மீதான பெற்றோர்களின் கவனிப்பு ஒரு வகை மூலதனமாக அமைகின்றது என்றும் பிள்ளைகள் சமூக பொருத்தப்பாடுடையவர்களாகவும் சமூக தேர்ச்சிகளை கொண்டவர்களாகவும் வளர வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் பிள்ளை எப்போதும் சிறந்த தொடர்பாடலுடன் வாழ உதவுதல் வேண்டும் என்றும் விபரண ரீதியாகக் கூறியுள்ளார்.

Rupasingha (1985) ஆம் ஆண்டில் புகழ்பூத்த பாடசாலைகள் உயர் வகுப்பினர் கற்பதற்கும் மிகுதி பாடசாலைகளுள் சமூக வகுப்பினர் அடுக்கமைவுக்கமைய கற்பதற்கு வாய்ப்பளிக்கின்றன எனவும் குறிப்பிடுகின்றார். மேலும் தாய் தந்தை கல்விமட்டம் வருமானம் போன்ற நிலைகளில் மேம்பாட்டை

ஏற்படுத்துவதன் மூலம் கல்வியில் சம வாய்ப்பை ஏற்படுத்தலாம் என்பதனை விபரணப் பகுப்பாய்வின் மூலம் தெளிவு படுத்தியுள்ளார்.

Educational consultants (1989) என்ற ஆசிய அபிவிருத்தி வங்கியால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது. குடும்ப நிலைகளும், தனியார் கல்வி நிலையங்களினதும் பங்களிப்புக்களும் கல்வியில் தாக்கம் செலுத்துவதனால் ஏழைகளுக்கு இத்தகைய வாய்ப்புக்கள் இல்லாது போவதனால் அதிகளவு பாதிப்புக்குள்ளாவது ஏழை மாணவர்களே எனக் குறிப்பிட்டுள்ளார்.

சேதுராஜா.செ (2004) இல் பெரும்பாலான பெற்றோர்களுக்கு கல்வி மீதான கவனம் குறைவடைந்து செல்கின்றமை அல்லது தம் பிள்ளைகளது கல்வி மேம்பாட்டிற்கு உண்மையில் யாது செய்தல் வேண்டும் என்பதில் அக்கறை காட்டாமை ஆசிரியர்களின் வினைத்திறன் குறைபாடுஇ தொழிலில் ஈடுபாடின்மை, அர்ப்பணிப்பு மனப்பாங்கின்மை, பெறுகின்ற பயிற்சிகளும் பட்டப்படிப்பின் பட்டங்களும் பதவியுயர்வுகளுக்காகவே அன்றி பயனுறுதி மிக்க கற்பித்தலுக்காக அன்று எனும் போக்கே முனைப்படைந்துள்ளது. பாடசாலை முதல்வர்கள் ஒரே பாடசாலையில் அளவுக்கதிகமாக சேவையாற்றுவதனால் முகாமைத்துவம் சார் மந்த நிலை வளர்ச்சியடைகின்றது. இது மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு தடையாக அமைகின்றது. அத்துடன் அவர்களது பரீட்சைப் பெறுபேற்று வீழ்ச்சிக்கும் காரணமாகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

சேதுராஜா. செ (2005) இல் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் கல்வி நடவடிக்கை ஏனைய பகுதிகளை விட பின்தங்கிய நிலையில் இருப்பதுடன் பாரபட்சமான பாகுபாட்டினையும் அனுபவித்து வருகின்றன. திறமைக்கும் தகுதிக்கும் முதலிடம் கொடுத்தும் இவற்றில் முதலிடம் வகித்தும் மிளிர்ந்த மக்கள் இன்று இவற்றில் இருப்பதற்கான காரணங்களாக நீண்ட கால போர்ச்சூழலில் புத்தியீவிகள் கல்விக் கரிசனையாளர்களது வெளியேற்றம், புலம்பெயர் மக்களது உழைப்புக்களின் உட்பாய்ச்சல், பாடசாலைகளினது வினைத்திறன் குறைந்து செல்லல் என்பன அமைகின்றன என்று விபரணப் பகுப்பாய்வின் மூலம் தெரிவித்துள்ளார்.

### III.எழுவினாக்களும் கருதுகோள்களும்

இவ்வாய்வு மேற்குறித்த ஒவ்வொரு காரணிகளும் தனித் தனியேயும் கூட்டாகவும் எவ்வாறு வினைத் திறனைப் பாதிக்கின்றன என்னும் எழுவினாவையும் பின்வரும் எடுகோள்களையும் கொண்டமைகிறது.

H1 குடும்ப வருமானத்திற்கும் பொருளியல் பெறுபேற்றிற்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகின்றது.

H2 சுயமாகத்தேடிக்கற்கும் ஆற்றலுக்கும் பொருளியல் பாட பெறுபேற்றிற்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படுகின்றது.

H3 பொருத்தமான ஆசிரிய வளம் இருந்தால் பொருளியல் பெறுபேறு அதிகரிக்கும்.

### IV. ஆய்வு முறையியல்


ஆய்வுப் பிரச்சனையை கண்டறிந்த பின்னர் அது தொடர்பான விடயங்களை சேகரித்து ஒழுங்கு முறையான படிமுறையூடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே ஆய்வு முறையியல் எனப்படும் இவ் ஆய்வானது தரவுகள் பண்புகள் அம்சங்களை ஆராய்வதனால் பண்புசார் விபரண ஆய்வு பின்பற்றப்படுகின்றது. அந்த வகையில் இவ் ஆய்வானது பொருளியல் பாட பெறுபேறுகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்பதை ஆய்வு செய்வதாக அமைகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்தில் 2016ம் ஆண்டில் பொருளியல்பரீட்சை நடைபெற்ற 25% ஆன பாடசாலைகளில் பொருளியல் பரீட்சைக்குத்தோற்றிய மொத்த மாணவர் தொகையில் 50% ஆன மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.


இவ் ஆய்விற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆய்வுக் கருவியாக அமைப்பு ரீதியிலான வினாக்கொத்து பயன்படுகிறது. மேலும் இதில் அவதானிப்பு நேர்காணல் மூலமும் தரவுகள் பெறப்பட்டது. இது துணைக் கருவியாக கொள்ளப்பட்டது.

இக் கருவி இலக்கிய மீளாய்வின் எண்ணக்கருக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டமையும் தரவு சேகரிக்க முன்னர் குறுகிய எண்ணிக்கையானோரில் பரிசோதனைக்குட்படுத்தபட்டதும் ஆய்வுக் கருவியின் பெறுமதித் தன்மையையும் நம்பிக்கைத்தன்மையையும், அதிகரித்துள்ளது. மூடிய வினாக்களினை உள்ளடக்கி, பொருளியல் பெறுபேற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை உள்ளடக்கியதாக வினாக்கொத்து காணப்படுகின்றது. ஆய்வினை செம்மையாக செய்வதற்காக புதிய கருத்துக்களிலிருந்தும் மேலதிக தகவல்களும், வெளிப்படுத்தப்படும் என்பதனை நோக்கமாகக் கொண்டு நேர்காணலும் மேற்கொள்ளப்பட்டது.

இவ் ஆய்விற்காக பயன்படுத்தப்பட்ட இரண்டாம் நிலைத்தரவு மூலங்களாக சஞ்சிகைகள், இணையத்தளம் ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், வடமராட்சி வலயக் கல்விப் பணிமனை புள்ளிவிபரம் ஆகியன காணப்படுகின்றன.




உருI: எண்ணக்கரு சட்டவாக்கம்



**V. தரவுப் பகுப்பாய்வு**

குடும்ப வருமானம் உயர்தரப் பொருளியல் பெறுபேற்றில் செல்வாக்கு செலுத்துகின்றது. குடும்ப வருமானம் அதிகமாக உள்ள குடும்பங்களில் கல்விக்காக செலவிடும் தொகை அதிகமாகக் காணப்படுவதால் அங்கு பெறப்படும் பெறுபேறுகளும் அதிகமாகக் காணப்படுகின்றது. வருமானம் குறைவாக உள்ள குடும்பங்களில் கல்விக்காக செலவிடும் தொகை குறைவாகக் காணப்படுவதால் மாணவர்களின் பெறுபேறுகள் குறைவடைந்து செல்கின்றது.

**கருதுகோள் 1**

இணைவுக் குணக அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் மாணவர்களின் பொருளியல் பெறுபேற்றிற்கும் குடும்ப வருமானத்திற்கும் இடையில் 67.9% ஆன தொடர்பு காணப்படுகின்றது..

பிற்செலவு மாதிரி அடிப்படையிலான பகுப்பாய்வு

$Y=B_1+ B_2X_1+E$

$Y=0.721+0.679\ X_1+E$

(0.013) (0.000)

$R^2 = 46.1$

பிற்செலவு பகுப்பாய்வின் அடிப்படையில் குடும்ப வருமானத்தின் பங்களிப்பு ஒரு அலகினால் அதிகரிப்பதால் பொருளியல் பெறுபேறு 67.9% ஆல் அதிகரிக்கின்றது. குடும்ப வருமானத்தின் பங்களிப்பு இல்லாத போதும் பொருளியல் மாணவர்களின் பெறுபேறு 0.721 ஆகக் காணப்படுகின்றது.

**கருதுகோள் 2**

மாணவர்கள் ஆசிரியர் கற்பிக்கும் விடையங்களுக்கு மேலதிகமாக சுயமாகத் தேடிக்கற்கும் போது அவர்களின் பாடம் சம்பந்தமான அறிவும்இ நினைவாற்றலும் அதிகரித்து பரீட்சைப் பெறுபேறுகள் அதிகரிக்கின்றன.

இணைவுக்குணக அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் மாணவர்களின் பொருளியல் பெறுபேற்றிற்கும் சுயமாக தேடிக்கற்கும் ஆற்றலுக்கும் இடையில் 69.3% ஆன தொடர்பு காணப்படுகின்றது.

பிற்செலவு மாதிரி அடிப்படையிலான பகுப்பாய்வு

$Y=B_2+ B_3\ X_2+E$

$Y=0.479+ 0.693\ X_3 +E$

(0.102)(0.000)

$R^2 =48.0$

பிற்செலவு பகுப்பாய்வின் அடிப்படையில் சுயமாகத் தேடிக்கற்கும் ஆற்றலின் பங்களிப்பு ஒரு அலகினால் அதிகரிப்பதால் பொருளியல் பெறுபேறு 69.3% ஆல் அதிகரிக்கின்றது. சுயமாகத் தேடிக்கற்கும் ஆற்றலின் பங்களிப்பு இல்லாத போதும் பொருளியல் மாணவர்களின் பெறுபேறு 0.479 ஆகக் காணப்படுகின்றது.

**கருதுகோள் 3**

பொருளியல் பாடத்திற்கென அப் பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் காணப்படுவதனால் அவர்கள் கூறும் உதாரணங்கள் எடுத்துக்காட்டுகள் மாணவர்களுக்கு தேவையானவையாகவும் இலகுவாக விளங்குவதாகவும்

அமைவதனால் பெறுபேறுகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. உதாரணங்கள் எடுத்துக்காட்டுகள் மாணவர்களுக்கு இலகுவாக விளங்காத சந்தர்ப்பத்தில் பெறுபேறுகள் குறைவடைகின்றன.

இணைவுக்குணக அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் மாணவர்களின் பொருளியல் பெறுபேற்றிற்கும் பொருத்தமான ஆசிரிய வளத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்குகின்றது. இவ் இரண்டு மாறிகளிற்கும் இடையில் 62.6% ஆன தொடர்பு காணப்படுகின்றது.

பிற்செலவு மாதிரி அடிப்படையிலான பகுப்பாய்வு

$$Y=B_3+ B_4 X_3 +E$$

$$Y=1.459+ 0.626 X_4 +E$$

$$(0.000)(0.000)$$

$$R^2=39.2$$

பிற்செலவு பகுப்பாய்வின் அடிப்படையில் பொருத்தமான ஆசிரிய வளத்தின் பங்களிப்பு ஒரு அலகினால் அதிகரிப்பதால் பொருளியல் பெறுபேறு 62.6% ஆல் அதிகரிக்கின்றது. பொருத்தமான ஆசிரிய வளத்தின் பங்களிப்பு இல்லாத போதும் பொருளியல் மாணவர்களின் பெறுபேறு 1.459 ஆகக் காணப்படுகின்றது.

## VI தொகுப்புரையும் பரிந்துரைகளும்

குடும்ப வருமானம் உயர்தரப் பொருளியல் பெறுபேற்றில் செல்வாக்கு செலுத்துகின்றது. குடும்ப வருமானம் அதிகமாக உள்ள குடும்பங்களில் கல்விக்காக செலவிடும் தொகை அதிகமாகக் காணப்படுவதால் அங்கு பெறப்படும் பெறுபேறுகளும் அதிகமாகக் காணப்படுகின்றது. வருமானம் குறைவாக உள்ள குடும்பங்களில் கல்விக்காக செலவிடும் தொகை குறைவாகக் காணப்படுவதால் மாணவர்களின் பெறுபேறுகள் குறைவடைந்து செல்கின்றது.

மாணவர்கள் ஆசிரியர் கற்பிக்கும் விடையங்களுக்கு மேலதிகமாக சுயமாகத் தேடிக்கற்கும் போது அவர்களின் பாடம் சம்பந்தமான அறிவும், நினைவாற்றலும் அதிகரித்து பரீட்சைப் பெறுபேறுகள் அதிகரிக்கின்றன.

பொருளியல் பாடத்திற்கென அப் பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரிய வளத்தை ஒரு பாடசாலை கொண்டிருக்கும் போது உரிய முறையில் பாடத்திட்டத்திற்கு ஏற்றவாறு தரமான கல்வியை அவர்கள் வழங்குவார்கள். இதனால் பெறுபேறுகள் அதிகரித்து காணப்படும்.

பொருளியல் பாடத்திற்கென அப் பாடத்தில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் காணப்படுவதனால் அவர்கள் கூறும் உதாரணங்கள் எடுத்துக்காட்டுகள் மாணவர்களுக்கு தேவையானவையாகவும் இலகுவாக விளங்குவதாகவும் அமைவதனால் பெறுபேறுகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. உதாரணங்கள் எடுத்துக்காட்டுகள் மாணவர்களுக்கு இலகுவாக விளங்காத சந்தர்ப்பத்தில் பெறுபேறுகள் குறைவடைகின்றன.

1) நிதிச் சேவைகள் தொடர்பில் ஒரு முன்னேற்றகரமான நிலையை உறுதிப்படுத்த வேண்டும். சுயதொழில் முயற்சியாளருக்குரிய கடன் வசதிகளை அதிகரிப்பதுடன் வர்த்தக சேவை நிலையங்களை அமைக்க ஊக்குவிக்க வேண்டும். பிரதேசத்திற்கு வெளியில் செல்லும் பணத்தின் வெளிப்பாய்ச்சலை குறைப்பதன் மூலம் பிரதேசத்திற்குள்ளேயே பணம் முதலிடப்படும் வகையில் மக்களைத் தூண்டுவதற்குரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன் மூலம் பெற்றோர்களின் செல்வ நிலையை அதிகரித்து அதனூடாக மாணணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்த முடியும்.
2) மீன்பிடி மற்றும் விவசாயத்துடன் இணைந்த கைத்தொழில்களை உருவாக்குவதன் மூலம் பிரதேச மக்களின் வருமானத்தை உயர்த்தி அதன் மூலம் கல்விக்காக செலவிடும் தொகையை அதிகரித்து பரீட்சையில் நல்ல பெறுபேற்றைப் பெறலாம்.

3) மாணவர்கள் கல்விக்காக செலவிடும் தொகை மற்றும் நாள் ஒன்றிற்கு வீட்டில் பொருளியல் பாடத்தைக் கற்பதற்காக ஒதுக்கப்படும் நேரத்தை அதிகரித்தல்.
4) பாடசாலைக் கற்றலுக்கு மேலாக சுயகற்றலில் ஈடுபடுதல். மற்றும் ஓய்வு நேரங்களில் நூலகத்தைப் பயன்படுத்தல்.
5) இப் பாடம் தொடர்பான நடைமுறை விடையங்களை அறியும் திறனை வளர்க்க வேண்டும். இதற்காக பத்திரிகைகள் சஞ்சிகைகள் வாசித்தல் வானொலி,தொலைக்காட்சி செய்திகளை கேட்க வேண்டும்.
6) ஓய்வு நேரங்களை அதிகமாக நண்பர்களுடன் கழிப்பதையும் அடிக்கடி விளையாட்டுக்கள் மற்றும் விழாக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதன் மூலமும் கல்வி கற்கும் நேரத்தை அதிகரித்து பரீட்சைப் பெறுபேற்றை அதிகரிக்கலாம்.
7) கல்வித்திட்டங்கள் அவற்றினை கற்பிக்கும் ஆசிரியரின் கையிலேயே பெரிதும் தங்கியுள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களை புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும் அவர்களின் நலனில் ஆர்வம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். உயர்ந்த குறிக்கோள்களையும் அவற்றை எய்தும் ஆர்வத்தையும்இ நம்பிக்கையையும் மாணவர் உள்ளங்களில் ஆசிரியர் தங்கள் நடத்தையாலும் கற்பித்தலாலும் தூண்டிவிட வேண்டும்.
8) மாணவர் முன்னேற்றத்தை பரீட்சிக்கவும் அளவிடவும் பொருத்தமான வழிமுறைகளை கையாள வேண்டும்.
9) ஆசிரியர்களுக்கு பொருத்தமான வழிகாட்டல் கருத்தரங்குகள் வலயக்கல்வி அலுவலகத்தால் நடாத்தப்பட வேண்டும்.
10) பாடத்தெரிவு நூலகப் பயன்பாடுஇ கற்றல் பழக்கங்கள் போன்ற விடையங்களில் துறை தேர்ந்தவர்கள் வழி காட்டும் போது மாணவர்களின் பிரச்சினைகன் தீர்க்கப்பட்டு கல்வி மீதான நாட்டம் அதிகரிக்கும். பரீட்சை அடைவு மட்டமும் அதிகரிக்கும்.
11) ஆசிரியர் இடமாற்றத்தில் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்.
12) க.பொ.த உயர்தர பொருளியல் பாடத்திற்கான தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் திணைக்களத்தின் கண்காணிப்பில் இயங்கும் நிபுணத்துவம் மிக்க ஆசிரியர் குழாம் ஒன்றால் தயாரிக்க வேண்டும்.
13) மாணவர்களது கற்றலுக்கான நேரம், சூழல்வசதி, பரீட்சை மாதிரிப்பயிற்சி, நூலகப்பாவனை என்பவற்றை ஊக்கப்படுத்த வேண்டும்.
14) மாணவர்களின் பாடத்திட்டதிதற்குத் தேவையான குறிப்புக்களை வழங்க வேண்டும்.
15) சமூகத்தில் நவீன கலாச்சாரப்பிரழ்வால் இளையோர் திசை திரும்பியுள்ளனர் இதனை நீக்க விழிப்புணர்வுத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.
16) சமூகம் கேலிக்கைகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு காட்டும் அளவுக்கதிகமான அக்கறையை மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்க மேம்பாட்டில் காட்டவேண்டும்.

## VII.உசாத்துணை நூல்கள்


1. ஆரிய புத்திரன்.ந, (2001), ''க.பொ.த சோதனையில் முதல் தடவையில் சித்தி பெறத் தவறிய மாணவர்கள் பற்றிய ஆய்வு'' 1989 – 1993 வெளியிடப்படாத ஆய்வுக்கட்டுரை, உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் , இலங்கை.
2. உதயராயன்.ரி, (2008), ஆசிரியரின் வகிபாக மாற்றமும் பெற்றோர் அங்கீகாரமும், கலாசுரபி, தூண்டல்-01, யாழ் தேசியக் கல்வியற் கல்லூரி வெளியீடு.
3. சந்திரசேகரம்.சோ, (1991), ''கல்வியியல் கட்டுரைகள்'', சூடாமணி பிரசுரம், சென்னை -33, இந்தியா.
4. சந்திரசேகரம்.சோ, (2000), ''சுதந்திர இலங்கையின் கல்வி வளர்ச்சி சாதனைகளும் பிரச்சனைகளும்'' , கைலாசநாதம் பவளவிழா மலர், யாழ்ப்பாணம், இலங்கை.
5. சந்திரபோஸ்.சு, (1989), தாழ்த்தப்பட்ட தமிழரின் கல்வி வளர்ச்சி, யாழ்ப்பாணம், இலங்கை.
6. சின்னத்தம்பி.மா, (2005), இலங்கையின் கல்விச் செலவு(1980-2005), வெள்ளி விழா ஞாபகார்த்த வெளியீடு, கல்வியியற் துறை யாழ். பல்கலைக்கழகம், விஸ்டம் பப்ளிகேயன்.

7. செபஸ்தியம்பிள்ளை ஜி.எம், (1998-1999), ‘‘கல்வியும் எமது சமூகமும் ஒரு சமூகவியல் நோக்கு மானுடம் சமூகவியல்’’, ஏடு-02, சமூகவியல் சமூகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
8. நாணயக்கார ஜீ எல் எஸ் மகிந்த ரணவீர, ‘‘தனியார் டியூசனின் தாக்கமும் 21ம் நூற்றாண்டின் கல்வித்துறை சவால்களும்’’ , பொருளியல் நோக்கு, ஆராட்சிபகுதி மக்கள்வங்கி தலைமையகம்இ கொழும்பு 2, இலங்கை., ஜீன்.ஜீலை 1996, பக்17.
9. ஜெயராசா.ச, (2000), யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்வி , கல்வியியல் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.
10. Htt://en.wikipedia.org/wiki